DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST (POA) ACT 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 14/2023**

அ.சா.8

Prosecution witness
(Witness examined through video conferencing in accordance with Madras High Court video conferencing Rules 2020)

| | | | |
|---|---|---|---|
| Name: | திரு. சின்னகண்ணு | Caste: | |
| Father's Name: | நாச்சியப்பன் | Calling: | காவல்துணைக் கண்காணிப்பாளர், ஓய்வு |
| Village: | 3/632, செந்தில்குமரன் நகர், சர்வேயர் காலனி, மதுரை -7 | Religion: | |
| Taluk: | மதுரை வடக்கு | Age: | 60 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 02.02.2026.

( எதிரி ஆஜர்.)

<u>முதல் விசாரணை</u>

நான் கடந்த 31.01.2025ம் தேதி முதுகுளத்தூர் உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று மதுரையில் வசித்து வருகிறேன். கடந்த 17.12.2022ம் தேதி இராமநாதபுரம் மாவட்ட முதுகுளத்தூர் உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது இளம்செம்பூர் காவல்நிலைய கு.எண். 62/2022 சட்டப்பிரிவுகள் 323 IPC and sec 3(1)(r),3(1)(s)of SC/ST (POA) Act ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கினை புலன் விசாரணை மேற்கொள்ள இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனது செயல்முறை ஆணை எண். C.No. 53/SJ&HR/RMD/2022, Dated: 17.12.2022ன் மூலம் புலன் விசாரணை அதிகாரியாக நியமித்தார். அந்த உத்தரவு **அ.சா.ஆ.4**. நான் அன்றைய தினமே பகல் 12.00 மணியளவில் எனது விசாரணைக்கு

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.02.02 16:08:53 +0530

எடுத்துக்கொண்டு இளம்செம்பூர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட மாரந்தை கிராமத்தில் மேலத்தெருவில் உள்ள சிவனான்டி புரோட்ட கடை முன்பு சென்று சாட்சிகள் கோவிந்தராஜ் மற்றும் திருமூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர், வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் பார்வை மகசரில் கையெழுத்து பெற்றேன். நான் தயார் செய்த பார்வை மகசர் **அ.சா.ஆ.5**. வரைபடம் **அ.சா.ஆ.6.** அன்றைய தினமே புகார் கொடுத்த சாட்சி கர்ணன் மற்றும் சம்பவத்தை பார்த்ததாக சொல்லப்பட்ட சாட்சிகள் சிவனான்டி, முத்துப்பாண்டி, சக்திவேல் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான கோவிந்தராஜ், திருமூர்த்தி ஆகியோர்களையும் மற்றும் சம்பவம் பற்றி தெரிந்துகொண்ட புகார்தாரர் கர்ணனின் மனைவி தேவி மற்றும் சாட்சிகள் கவிதா, பிச்சைப்பாண்டி ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை தனித்தனியாக பதிவு செய்தேன். அன்றைய தினமே புகார்தாரர் மற்றும் எதிரிக்கு சாதிசான்றிதழ் வழங்குமாறு கடலாடி வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 30.12.2022 ம் தேதி புகார்தாரர் மற்றும் எதிரிக்கு சாதிச்சான்றிதழ் பெற்று வழங்கிய கடலாடி வட்டாட்சியர் மரகத மேரி அவர்களை விசாரித்து அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். வட்டாட்சியர் மரகத மேரி புகார்தாரர் பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர் என்றும் எதிரி சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த மறவர் சமூகத்தை சேர்ந்தவர் என்றும் சாதிச்சான்றிதழ் வழங்கினார். அவர் வழங்கிய சாதி குறித்த அறிக்கை **அ.சா.ஆ.7**. எனது விசாரணையில் புகார்தாரர் தன் புகாரில் கூறியுள்ளதுபோல் இராமு மற்றும் திருமுருகன் சம்பவத்தில் ஈடுபடவில்லை என தெரியவந்ததால் மேற்படி நபர்களை வழக்கிலிருந்து

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.02 16:08:58 +0530

நீக்கம் செய்து நீக்கல் அறிக்கை தயார் செய்தேன். நான் தயார் செய்த எதிரி நீக்கல் அறிக்கை **அ.சா.ஆ.8**. 27.01.2023 ம் தேதி புகார்தாரருக்கு சிகிச்சை அளித்த முதுகுளத்தூர் அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் சிந்து அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்றேன். அந்த காயச்சான்று **அ.சாஆ.9**. அதே தினம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆர் பாண்டி அவர்களை விசாரித்து எனது விசாரணையின் முடிவில் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 323 IPC and sec 3(1)(r),3(1)(s)of SC/ST (POA) Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி கொடுத்த புகாரின் பேரில் ஒரு வழக்கு இவ்வழக்கின் புகார்தாரரான கர்ணன் மீதும் அவரை சார்ந்தவர்கள் மீதும் இளம்செம்பூர் காவல்நிலையத்தில் கு.எண். 61/2022 என வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் கொடுத்த புகார் மற்றும் எதிரி கொடுத்த புகார் இரண்டுக்குமே வழக்கு நேரடியாக பதிவு செய்யப்படாமல் மனு ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிதான் முதன்முதலில் காவல்நிலையத்தில் ஆஜராகி அ.சா.1 கர்ணன் மீது புகார் கொடுத்தார் என்றும் அதனடிப்படையில் வழக்கும் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரி கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட கு.எண். 61/2022 வழக்கையும், அ.சா.1 கர்ணன் கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட கு.எண். 62/2022 வழக்கினையும் நான்தான் விசாரணை செய்தேன் என்றால் சரிதான். நான் சட்டவிதிகளை பின்பற்றி புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கர்ணன் மதுபோதையில் சாலையை மறித்துகொண்டு வாகனத்தை

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.02.02 16:09:03 +0530

நிறுத்தியதால்தான் எதிரி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள சக்திவேல் மற்றும் முத்துப்பாண்டி என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் பொம்பள புள்ள தண்ணீர் எடுத்து வரும்போது பைக்கை ஓரமாக நிறுத்த வேண்டியதானே இப்படி நடுரோட்டில் நிறுத்தினால் எப்படி என்று மணி கேட்டார், அப்போது கர்ணன் போனில் பேசியவாறே பைக்கை எடுத்தபோது பைக்கில் இருந்த உரமூடையும் பைக்கும் கீழே விழுந்துவிட்டது என்று கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு மணி கர்ணன் முதுகில் அடித்துவிட்டதாக வாக்குமூலம் அளித்துள்ளார்கள். புகார் மனுவில் சாதியை சொல்லி திட்டியதாக வாசகம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் உள்ள மங்களம், கண்ணன், ஆறுமுகம், பாலமுருகன், கருப்பையா ஆகியோர்களை சாட்சிகளாக நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சிவனான்டி, முத்துப்பாண்டியை தவிர்த்து இதர சாட்சிகள் அனைவரும் அ.சா.1 கர்ணனுக்கு உறவினர்கள் என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த புகாரில் அ.சா.1 கர்ணன் சம்பவ சமயத்தில் மதுபோதையில் இருந்தார் என சொல்லியுள்ளார் என்றால் சரிதான். என்னுடைய இறுதி அறிக்கையில் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றோ அதற்கு பதிலடியாக இவ்வழக்கு புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றோ நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கை முறையாக விசாரணை மேற்கொள்ளவில்லை என்றும் காவல்நிலையத்தில் வைத்து அனைத்து ஆவணங்களையும் தயார் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. பொய்யாக பதிவு செய்யப்பட்ட வழக்கினை முறையாக விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.02 16:09:07 +0530

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| Thiru. R. Saranraj,<br>Assistant Programmer,<br>Principal District Court,<br>Madurai. | Thiru. A. Mohamed Yasin,<br>Assistant,<br>PCR Court,<br>Ramanathapuram. |

| | | |
|---|---|---|
| Co coordinator<br>Remote site | Deponent | Co coordinator<br>Court site |

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.02 16:09:12 +0530